

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 09.08.2024 அன்று “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டையினை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் பி.சி.தங்கம், கள்ளிமந்தையம் ஊராட்சி மன்ற தலைவர், மு.கணேசன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி கோ.புஷ்பகலா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை மாவட்டம், மதுரைக் கல்லூரியில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் உயர் கல்வி பயிலும் அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி ( தமிழ்வழி ) மாணவர்களுக்கு மாதம்தோறும் ரூ.1000 பெறுவற்கான வங்கி பரிவர்த்தனை அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர் மாவட்டச் செயலாளர், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி, மாமன்ற உறுப்பினர் லத்திகா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.377.83 கோடி மதிப்பீட்டில்

# நீலகிரி மாவட்டத்தில் - 32 மருத்துவக் கட்டிடப் பணிகள்!

## பூர்வீக குடிமக்களின் சர்வதேச தின விழாவில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

**நீலகிரி, ஆக.11–**

**நீலகிரி மாவட்டத்தில், பூர்வீக குடிமக்களின் சர்வதேச தின விழாவினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்டத்தில் ரூ.377.83 கோடி மதிப்பீட்டில் 32 மருத்துவக்கட்டிட பணிகள் நடைபெற்று வருவதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மாவட்ட நிர்வாகம், வனத்துறை, மாவட்ட ஊராட்சிகள் (ம) பழங்குடியினர்கள் இணைந்து நடத்திய பூர்வீக குடிமக்களின் சர்வதேச தின விழாவினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று முன்தினம் (09.08.2024) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இவ்விழா நீலகிரி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பூர்வீக குடிமக்களின் சர்வதேச தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் பூர்வீகக் குடிகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஆண்டிக்கான கருப்பொருள் ‘சுய நிர்ணயத்திற்கான முகவர்களாகும் பூர்வீக குடி இளைஞர்கள்” தொல்குடிகள், முதுகுடிகள், ஆதிகுடிகள், பழங்குடிகள், திணைக்குடிகள், பூர்வீகக்குடிகள் என்றெல்லாம் அறியப்படும் இவர்கள், உலகளாவிய நிலையில் 37 கோடி பேர் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில் 702 பழங்குடி இனங்கள் அடர்ந்த மலைகள், வனங்கள், சமவெளிகள், தீவுகளில் பழங்காலத் தன்மை மாறாமல் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழகத்தில் தோடர், கோத்தர், இருளர், கசவர், முள்ளுக் குரும்பர், பெட்டக் குறும்பர், பணியர், காட்டுநாயக்கர், பளியர், குறவர், மலைமலசர், மலை வேடர், காணிக்காரர், மலையாளி, காடர், முதுவர் என்று 36 வகையான பழங்குடியினத்தவர் வசிக்கின்றனர். நீலகிரியில் மட்டும் 7 வகையான பழங்குடியினர் உள்ளனர்.



### மலைவாழ் குழந்தைகளின் கல்வி மேம்பட பலதிட்டங்கள்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு மலைவாழ் குழந்தைகளின் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்கள் மேற்கொண்டதின் விளைவாக கோத்தகிரி அருகில் உள்ள சோலூர்மட்டம் தும்பி பெட்டுப்பகுதி பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவி ஸ்ரீமதி ‘நீட்’ தேர்வில் தேர்ச்சி பெற்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பில் சேர்ந்துள்ளார். பிரசவித்த மறுநாளே தேர்வு எழுதி 23 வயதில் சாதித்த திருவண்ணாமலையைச் சேர்ந்த ஸ்ரீபதி என்ற பழங்குடி பெண் சிவில் நீதிமன்ற நீதிபதிக்கான தேர்வில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

மலை மாவட்டங்களில் பழங்குடியினருக்கு 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்திய இந்தியாவின் முதல் மாவட்டம் நீலகிரி மாவட்டமாகும். தமிழ்நாட்டில் பல்வேறு நிலையில் பின்தங்கிய மிக ஆறு முற்கால பழங்குடியின மலைவாழ் மக்கள் உட்பட்ட 7.94 இலட்சம் மலைவாழ் மக்கள் மாநிலம் முழுவதும் பரவலாக காணப்படுகின்றனர். இந்த மலைவாழ் மக்களின் சுகாதார நல்வாழ்வு மேம்பாட்டிற்காக மருத்துவத்துறை பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. அதில் ஒன்று ஹீமோகுளோபினோபதி தடுப்புத் திட்டம். ஹீமோகுளோபினோபதி நோய் என்பது பொதுவாக பழங்குடியினரிடையே காணப்படும் இரத்தம் சார்ந்த மரபணு நோயாகும். மேலும், ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் பரிசோதனைகள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் உயிர் காக்கும் உயர்ரக மருந்துகள் வழங்கும் திட்டம் கொல்லிமலையில் 30.05.2023 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டமானது பொதுவாக இரத்தம் சார்ந்த நோய்களான தலாசீமியா, சிக்கிள் செல் இரத்த சோகை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தடுப்பு மற்றும் சிகிச்சை மேற்கொள்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

பள்ளி மாணவர்களிடம் ஹீமோகுளோபினோபதி நோய் கண்டறியும் திட்டம் 14 மாவட்டங்களிலுள்ள 30 வட்டாரங்களில் நடைபெற்று வருகிறது. சுமார் 1.21 லட்சம் மாணவர்களுக்குஹீமோகுளோபினோபதிக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அதில் 9 சதவிகித நபர்களுக்கு நோய் கடத்தும் தன்மையுடையவர் (carrier) எனக் கண்டறியப்பட்டது. இத்திட்ட பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் 30 பழங்குடியின வட்டாரங்களிலுள்ள 78,949 கருவுற்ற தாய்மார்களுக்கு ஜூன் 2024 வரை பரிசோதனை செய்யப்பட்டு, இந்திய அளவிலேயே முன்னோடித் திட்டமாகத் திகழ்கின்றது.

### பிரசவ கால காத்திருப்பு அறைகள்!

மேலும், மாநிலத்தில் உள்ள பழங்குடியினர் சமூகங்களுக்குள் சிக்கிள் செல் இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஆதரவு மற்றும் சேவைகளை வழங்குவது - பராமரிப்பு இத்திட்டத்தின் நோக்கமாகும். நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் NAWA மற்றும் ASWINI ஆகிய இரண்டு பழங்குடியினருக்கு சேவை புரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், கோத்தகிரி, கூடலூர், குன்னூர் உள்ளிட்ட குறிப்பிட்ட வட்டாரங்களை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை, மொத்தம் 674 பழங்குடியினர் பயனடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் பழங்குடியினர் வசிக்கும் மலையடிவாரப் பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பழங்குடியினருக்காக பிரத்யேக பிரசவ கால காத்திருப்பு அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை, மொத்தம் 794 பழங்குடியின கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர். தொலைதூரம் மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்கு 100 அவசர சேவை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை, மொத்தம் 27,284 நபர்கள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

மேலும், வட்டாரங்களில் உள்ள நடமாடும் மருத்துவக் குழுக்கள் அல்லாமல் கூடுதலாக 20 பழங்குடியினருக்கான பிரத்யேகமான நடமாடும் மருத்துவக் குழுக்கள் 14 மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் வட்டாரங்களில் வழக்கமான மருத்துவச் சேவைகளை வழங்குவது மட்டுமல்லாது 14 வயதும் அதற்கு மேற்பட்ட ஹீமோகுளோபினோபதீஸ் மாணவர்களிடையே தடுப்பு நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்கின்றன.

ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை, பழங்குடியின மக்களுக்காக நடமாடும் மருத்துவக் குழுக்கள் மூலம் நடைபெற்ற 2,958 முகாம்களில் பழங்குடி கிராமங்களில் வசிக்கும் 1.51 லட்சம் நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

### மலைவாழ் மக்களுக்கு இலவச ஆம்புலன்ஸ்!

கடந்த 30.11.2022 அன்று ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாரம் பர்கூர் மலை வாழ் மக்களுக்காக 108 ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டது. இதன் மூலம் 1,600 நபர்கள் இதுநாள் வரை பயன்பெற்றுள்ளனர்.

கடந்த 21.06.2022 அன்று நாமக்கல் மாவட்டம், கெடமலை கிராமத்திற்கு மலைப் பாதையில் நடந்து சென்று மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் 75 இலட்சமாவது பயனாளி திருமதி.நல்லம்மாள் என்பவருக்கு மருந்துப் பெட்டகம் வழங்கப்பட்டது.

05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் வட்டாரத்தில் உள்ள பெட்ட முகிலாலம் பகுதிக்கு இலவச ஆம்புலன்ஸ் சேவை வழங்கியதன் மூலம் தற்போது வரை 2,000க்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 5,500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மருத்துவச் சேவையை பெற்றுள்ளனர்.

23.12.2023 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் தளி வட்டாரம் கொடக்கரை மலை கிராமத்திற்கு 10 கிலோமீட்டர் தொலைவில் நடந்து சென்று 50 நபர்களுக்கு விலையில்லா கண் கண்ணாடியும், பெட்டமுகிலாலம் பகுதியில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பிறப்புச் சான்றிதழில் பெயர் பதிவு செய்யாத 200 பள்ளிக் குழந்தைகளுக்கு காலதாமதக் கட்டணம் ஏதுமின்றி சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து பிறப்புச் சான்றிதழில் பெயர் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

### பல்வேறு மருத்துவக் கட்டமைப்புப் பணிகள்!

நீலகிரி மாவட்டத்தில் ரூ.377.83 கோடி மதிப்பீட்டில் 32 மருத்துவக்கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல், நீலகிரி மாவட்டத்தில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் 14 அறிவிப்புகளின் மூலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்கு பல்வேறு மருத்துவக் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பில் குன்னூர் அரசு மருத்துவமனைக்கு சி.ஆர்.எம்.கருவியும், ரூ.30 இலட்சம் மதிப்பில் கொலக்கொம்பை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்தப் பரிசோதனைகளுக்கான பகுப்பாய்வுக் கருவியும், ரூ.60 இலட்சம் மதிப்பில் பிக்கட்டி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடமும், ரூ.20 இலட்சம் மதிப்பில் கரிக்கையூர் துணை சுகாதார நிலையத்தில், இரு சக்கர அவசர கால மருத்துவ வாகனமும், ரூ.4.50 கோடி மதிப்பில் 9 புதிய துணை சுகாதார நிலையக் கட்டிடங்கள், 5 துணை சுகாதார நிலையங்களில் ரூ.60 இலட்சம் மதிப்பில் இந்திய மருத்துவ முறை மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 5,23,951 பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். ‘இன்னுயிர் காப்போம்’ திட்டத்தின்கீழ் இதுவரை 955 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 59 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டுப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

### பழங்குடி மக்களுக்கு விருதுகள்!

முன்னதாக, அமைச்சர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு தலா ரூ.5.73 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 9 பயனாளிகளுக்கு தலா ரூ.2,000 மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களையும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கு மருந்துப் பெட்டகங்களையும், 10 பள்ளிச் சிறார்களுக்கு கண் கண்ணாடிகளையும், பழங்குடியின மக்களுக்கு பழங்குடியின சமுதாய விருதுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் மற்றும் கேடயங்களையும், ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பழங்குடியின தலைவர்களுக்கு சிறப்பு விருதுகளையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பிற்கு விருதுகளை யும் வழங்கிப், பாராட்டினார்கள்.

### சீக் நிறுவனம் சார்பில் வாகனங்கள்!


அதனைத் தொடர்ந்து, அமைச்சர்கள், சீக் நிறுவனத்தின் சார்பில் கோத்தகிரி வட்டத்தில் செயல்பட்டு வரும் நாவா சங்கத்தின் பயன்பாட்டிற்காக ரூ.7 இலட்சம் மதிப்பீட்டிலான வாகனத்திற்கான சாவி மற்றும் ஹூண்டாய் நிறுவனத்தின் சார்பில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டிலான வாகனத்தின் சாவியினையும், கூடலூர் வாடவயல் கிராமத்தில் வீடு கட்டுவதற்கு ஏதுவாக சீக் நிறுவனத்தின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கியும், பழங்குடியின மக்கள் வாழ்ந்த கலாச்சாரங்கள் தொடர்பான புகைப்படக் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்கள்.

இவ்விழாவில், சமூகநீதி மற்றும் மனித உரிமை தலைவர் திருமதி.சாமுண்டீஸ்வரி, முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் வெங்கடேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழக பொது மேலாளர் அசோக்குமார், முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அருண்குமார், பழங்குடியின ஆராய்ச்சி மைய இயக்குநர் (பொ) உதயகுமார், வருவாய் கோட்டாட்சியர்கள் மகராஜ் (உதகை), சதீஷ் (குன்னூர்), துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. பாலுசாமி, இணை இயக்குநர் (மருத்துவ நல பணிகள்) (பொ) மரு.நாக புஷ்பராணி, மகளிர் திட்ட இயக்குநர் காசி நாதன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதி வாளர் தயாளன், நகர மன்றத்தலைவர்கள் திருமதி.வாணீஷ்வரி (உதகை), திருமதி.பரிமளா (கூடலூர்), நகரமன்ற துணைத்தலைவர்கள் வசீம்ராஜா (குன்னூர்), ரவிக்குமார் (உதகை), கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் திருமதி.கீர்த்தனா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஜெயகுமார், சென்னை சீக் பவுண்டேசன் நிறுவனர் டாக்டர். விமலா ராணி, நாவா சங்கச் செயலாளர் ஆல்வாஸ், திட்டக்குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், திருமதி.விசா லாட்சி, பழங்குடியின குழுத்தலைவர்கள், பழங்குடியின மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஞா. மணிமாறன்

### ஆகஸ்ட் 11 (1984)



**மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.**

**1969ல் ‘கலைஞர் மன்றம்’ என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**‘வரதராஜன் கலைக்குழு’ எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுச் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் ஞான திரவியம், பிரபாகரன், ஆவின் ஆறுமுகம், ஜார்ஜ்கோசல், சித்திக், கணேஷ்குமார் ஆதித்தன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் அரசு கல்லூரியில் “தமிழ்ப் புதல்வன்” திட்டத்தை 9 ஆம் தேதி துவக்கி வைத்தார்கள். அதன்படி தென்காசி மாவட்டத்தில் 50க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த 4301 மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 1000 பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டைகளை மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. வழங்கினர். உடன் பழனி நாடார் எம்.எல்.ஏ., சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ., நகர்மன்றத் தலைவர் சாதிர், துணைத் தலைவர் சுப்பையா உள்பட பலர் உள்ளனர்.